**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**
**ஊடக அறிக்கை**
**பொது அலுவல்கள் பிரிவு**
**தொ.பே: +94 (11) 249-8100 ● பெக்ஸ்: +94 (11) 244-9070**
**ஈமெயில்:** VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

*ஊடக அறிக்கை இலக்கம்: **20201217***

## மிலேனியம் சலேஞ் கோர்ப்பரேஷன் சபையின் தீர்மானம் குறித்த அறிக்கை

**கொழும்பு, டிசம்பர் 17, 2020** – *பங்காளி நாட்டின் ஈடுபாடின்மை காரணமாக இலங்கைக்கான உத்தேச **89** பில்லியன் ரூபா எம்.சி.சி. அபிவிருத்தி உதவி அன்பளிப்பு தொகையை நிறுத்துவதற்கு மிலேனியம் சலேஞ் கோர்ப்பரேஷன் (எம்.சி.சி.) சபை டிசம்பர் மாதம் **15** ஆம் திகதி தீர்மானித்துள்ளது. இலங்கைக்கென ஒப்புதலளிக்கப்பட்ட இந்த **89** பில்லியன் ரூபாவானது, தமது பொருளாதார அபிவிருத்தி முன்னுரிமைகளை தொடர்வதற்கும், வறுமையை குறைப்பதற்கும் மற்றும் தமது பொருளாதாரங்களை வளர்ப்பதற்கும் கடனற்ற நிதியுதவி தேவையாக இருக்கும் தகுதியான ஏனைய பங்காளர் நாடுகளுக்கு கிடைக்கச் செய்யப்படும்.*

*உதவிபெறும் நாடுகளின் ஆர்வம் மற்றும் பங்கேற்பு, வெளிப்படைத்தன்மை, மற்றும் கடனற்ற நிதியுதவி பெறுபேறுகளுக்கான பொறுப்புக்கூறல் என்பன எம்.சி.சி.யின் அபிவிருத்தி வடிவத்திற்கு அடிப்படையாகும். மொத்தமாக சுமார் **13.5** பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான **38** அன்பளிப்பு நிதியுதவி ஒப்பந்தங்கள் தொடர்பில் உலகளவில் சுமார் **30** நாடுகளுடன் எம்.சி.சி. வெற்றிகரமாக கூட்டு சேர்ந்துள்ளது. உள்ளூர் மற்றும் உள்நாட்டு முதலீட்டுக்கு செயலூக்கம் அளிப்பதன் மூலம் இந்த அன்பளிப்பு தொகைகள் மில்லியன் கணக்கான மக்களை வறுமையிலிருந்து உயர்த்தியுள்ளன.*

*அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கையின் நண்பனாகவும் பங்காளராகவும் இருப்பதுடன்,* COVID *இற்கு பதிலளிப்பதிலும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதிலும் இலங்கைக்கு தொடர்ந்தும் உதவியளிக்கும்.*